★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 5563

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: வைகாசி 27உ சனி (9—6—56) ★ ★ வெளியூர்: வைகாசி 28உ ஞாயிறு (10—6—56) [இதழ் 306

பரீட்சையில் ஒன்ருகத் தேறிய தாயும் மகளும்!

நாசிக், ஜுன் 6—

திருமதி சுபத்ராபிபு மெர்ச்சண்ட் என்ற அம்மையார், தனது மகளுடன் சேர்ந்து, அண்மையில் நடைபெற்ற பள்ளி இறுதிவகுப்புத் தேர்வில் கலந்து கொண்டு தேறியிருக்கிருர் என்று தெரிய வருகிறது.

இந்த அம்மையார் இங்கு ஒரு பிரபலமான, 'சமூக சேவகி' என்பதுடன், மலேகான் நகர காங்கிரஸ் கமிட்டியின் தலைவியும்

(4-ம் பக்கம் பார்க்க)

வளம் கொழிக்கும் தமிழ் நாட்டில் ஏழ்மை இருப்பானேன்?

இல்லாமையால் மக்கள் இடர்படுவானேன்?

பிறந்த நாட்டில் கவளம் சோற்றுக்கு வழியின்றி அயல் நாடுகளில் தமிழர் அவதியுறுவானேன்?

பண்டாரம்கூட இழந்துவிட்டத் திருவோட்டைத் தேடும்போது தென்னுட்டவர் தாயகம்பற்றிக் கவலைப்படாமலிருக்க முடியுமா?

மாநாட்டில் அண்ணு அறைகூவல்

"நம்முடைய நாடு சாமானியமான நாடு அல்ல; தங்கம் விளைகின்ற நாட்டிலே பிறந்தோம்—தரித்திரத்தாலே தாக்கப்பட்டிருக்கிருேம்! இரும்பு இருக்கிற நாட்டிலே இருக்கின்ருேம்—இல்லாமையில் இடர்படுகின்ருேம்! கத்தும் கடலிலே முத்து இருக்கின்றது—ஆனுல், வாழ்க்கை, மத்தடிபடும் தயிருக்குச் சமமாய் இருக்கிறது! நம்முடைய மூதாதையர்கள் கட்டியாண்ட கோட்டைகள் எல்லாம் இடிந்து விட்டன! அவர்கள் வெட்டிய அகழிகள் எல்லாம் தூர்ந்துவிட்டன! அவர்கள் இயற்றிய இலக்கியங்களை படிப்பார் இன்று இல்லை; அந்த எழுத்துக்கள் அத்தனையையும் கண்டறிவதற்கு நம்மிடத்திலே திறமை இல்லை!

"இந்தத் தாழ்நிலையை அடைந்திருக்கின்ற இந்த நேரத்தில் நம்மில் சிலர் இன்பக் கனவுகளைக் காணுகின்ருேம்; எதிர்காலத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கின்ருேம்—மூன்று பக்கத்தே கடலும், அதை ஒட்டி மலையும், மலையை யொட்டி சாலைகளும், சாலைகளுக்குப் பக்கத்தில் சோலைகளும், சோலைக்குப் பக்கத்தில சிற்ருறுகளும், சிற்ருறுகளை அடுத்து சிற்றூர்களும், சிற்றூர்களுக்குஊடே பேரூர்களும், எழில்மிக்கக் காட்சிகளைக் கொண்ட நம்முடையதைப் போன்ற நாடு, உலகத்தில் வேறு இல்லை.

"பிரான்சு நாட்டில் சில பொருள் கிடைக்கும்—பல பொருள் கிடைக்காது; ஜெர்மனியிலும் அப்படித்தான்; இங்கிலாந்து நாட்டில் நிலக்கரியும், சீமைச் சுண்ணும்பும் தவிர வேறு பொருள் கிடைக்காது; ஆனுல், நம்முடைய தாயகத்தில், நம்முடைய தந்தையர் நாட்டில்—முன்னேயர் நாட்டில்—இயற்கை நமக்கு அளித்திருக்கிறது; மூழ்கினுல் முத்தெடுக்கின்ருேம! காட்டுக்குப் போனுல் அகிலும, சந்தனமும் எடுக்கின்ருேம! அங்கே 'என்னை விட்டுவிட்டுப் போகின்ருயே?' என்று, யானைகள் நம்மைத் தூரத்திக் கொண்டு வருகின்றது!

"நம்முடைய நாட்டில் எதை விளைவித்தாலும் விளைகிறது; நெடிதரும் புகையிலையா?—நம்மாலே விளைவிக்க முடியும! சுவை தரும கரும்பா?—ஏராளமாக விளைகின்றது! செந்நெல் மணிகளா?—போர் போராகக் குவிக்கின்ருேம! எத்தகைய விளைபொருளும, நம்முடைய நாட்டில் இல்லாத பொருளல்ல!

"அணு குண்டு செய்வதற்கேற்ற தோரியம் யுரேனியம் நம்முடைய கடற்கரை ஓரங்களில் புதைந்து கிடப்பதை அணுசக்தி ஆராய்ச்சியாளர்கள் எடுத்துச் சொல்லி யிருக்கிருர்கள். இவ்வளவு அருமையான இயற்கை வளம் பொருந்திய நம்முடைய நாட்டில் ஏழ்மை இருப்பானேன்? இல்லாமையில் நாம் இடர்ப்படுவானேன்?"

—என்று, திருச்சி மாநில மாநாட்டில், அண்ணு அவர்கள், சிறப்புரை ஆற்றுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

நம்முடைய தோழர்கள்—பர்மா இலங்கை, மலேயா முதலிய நாடுகளிலிருந்து வந்தவர்கள்—இங்கே பேசும்போது, நாம் உள்ளம் உருகத்தான் செய்தோம், 'இந்த நாட்டில் ஒரு கவளம் சோற்றுக்கு வழி இல்லாமல் நாங்கள் அந்தந்த நாடுகளுக்கு போயிருக்கிருேம்,' என்று அவர்கள் கூறினுர்கள்.

"வேறு எந்த நாட்டிலேயும் இத்தகு இழிநிலை இல்லை. நீங்கள் எங்காவது சுற்றிப் பார்க்கும் போது, ஒரு சீனநாட்டான் குப்பைக் கூட்டுவதைப் பார்க்கிறீர்களா? ஒரு அமெரிக்க நாட்டான் சிறு அங்காடி வைத்திருப்பதைப் பார்க்கிருேமா? பர்மியன் நம்முடைய பாதையைச் செப்பனிடுவதைப் பார்க்கிருேமா?

"ஆனுல் நம்முடைய தமிழன் தான் பர்மா நாட்டிலே இரப்பர் பால் இழுக்கிருன்! சிலோன் தேயிலைக் காடுகளில், நண்டுகடிக்கும், அரணைக் கடிக்கும் கங்காணியின் சவுக்கடிக்கும், கோத்தலாவலைபோன்ற கொடியோரின் சட்டங்களுக்கும், தன் மார்பையும், முதுகையும் வயிற்றையும் காட்டிக் கொண்டு கூலியாக வாழ்கின்ருன்! மலேயா காடுகளில் மிருகங்களினும் கேவலமாக நடத்தப்படுகின்ருன்! சான்சிபார் தீவிலேகசக்கிப்பிழியப்படுகின்ருன்! டிரினிடாட் தீவில் சிறகொடிந்த பறவையைப் போல் தவிக்கிருன்!

"அவன் பிறந்த நாட்டில் காவிரி வெள்ளம் புரண்டு ஓடுகின்றது! அவன் வாழ்ந்த நாட்டில் வைகை இருக்கிறது! வளம் பலவும் உண்டு! அவனுடைய மூதாதையரில் ஒருவருக்குப் பெயர் சோழன்; மற்றவனுக்குப் பெயர் சேரன்; இன்னெருவனுக்குப் பெயர் பாண்டியன; இவர்கள் கட்டிய கோட்டைகளின் இடிந்த காட்சிகளை இன்றும் நாம் பார்க்கின்ருேம்; ஆனுலும், தமிழன் இங்கே ஒரு கவளம் சோற்றுக்கு வழியின்றி ஓடியிருக்கிருன், வேறு நாடுகளுககு! 'ஏன்' என்று கேட்பார் இல்லை, இந்த நாட்டில்! 'எதற்காக இந்த நிலை?' என்று ஆராய்வார் இல்லை, இந்த நாட்டில்! ஆகையால்தான், தி. மு. கழகம் தன்னுடைய நாட்டைப் பெற

(4-ம் பக்கம் பார்க்க)

வடநாட்டு 'ஆச்சாரியார்' கிருபளானியின் தமிழரை காட்டிக் கொடுக்கும் போக்கு?

சிங்கள மொழியுடன் சமநிலை கோரக் கூடாதாம்!

இலங்கை மந்திரியின் பொறுப்பற்ற செயல்

தமிழர்மீது குற்றம் சுமத்தி ஆச்சாரியா கிருபளானிக்கு தந்தி அடித்தாராம்

இலங்கைத் தமிழர்கள், தமிழ் மொழிக்கும் சிங்களத்தைப் போலவே சமநிலை—அந்தஸ்து வேண்டுமெனக் கோருவதை, வடநாட்டில் உள்ள ஒரு காலத்திய பிரபல அரசியல் தலைவரான ஆச்சாரிய கிருபளானி கண்டித்தாராம். சம்மந்தமே இல்லாத ஒரு விவகாரத்தில், அரசியலில் மக்களால் வெறுத்து ஒதுக்கப் பட்டுக்கிடக்கும் கிருபளானி, தன் இலங்கை நண்பர் ஒருவரிடத்தில், இந்தக் கண்டனக் கருத்தைத் தெரிவித்து வீண் வம்பை விலைக்கு வாங்கிக்கொண்டிருக்கிருர் என்று கூறப்படுகிறது.

இந்த 'அரசியல் விதவை,' இப்படி எவரும் கேட்காத ஒரு கருத்தைத் தெரிவித்ததைப் புகலிடமாகக் கொண்டு இலங்கை சிங்கள மொழி வெறியர்கள், தமிழர் மீது மேலும் துவேஷத்தை வளர்த்துக்கொள்ளத் தீர்மானித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

வடநாட்டு 'ஆச்சாரியாரா'க விளங்கும் கிருபளானி, தமிழர்களுக்கு விரோதமான கருத்து அறிவித்திருப்பதை ஆதாரமாகக் கொண்டு, இலங்கை 'முற்போக்கு' சர்க்காரின, துணை மந்திரி ஒருவர கிருபளானிக்கு தந்தி ஒன்று அனுப்பியிருக்கிருராம்.

இந்தியாவிலிருந்து, தென்னுட்டுத் தமிழர்கள பிரிந்து, இலங்கையில உள்ள தமிழர்களையும் சேர்த்துக்கொண்டு, அவர்கள் வாழும பிரதேசங்களடங்கிய நாடு ஒன்று அமைக்க முயற்சி நடைபெறுவதாகவும், இந்த முயற்சி இலங்கையில் வாழும் சிங்கள இனத்தவரை ஒழிக்க மேற்கொளளப்படும முயற்சி என்றும், இந்த முயற்சியை எதிர்த்து, 'வாழ்வா? சாவா?' என்ற அடிப்படையில் சிங்களவர் போராடிக் கொண்டிருப்பதாயும், கே. எம். பி. ராஜரத்னே என்ற அந்த துணை மந்திரி, தன்னை வெகுப் பிரமாதமான 'இராஜ தந்திரி' என்று கருதிக்கொண்டு, கிருபளானிக்குத் தந்தி அனுப்பியிருக்கிருராம்!

இவரது இந்தச் செயல் இலங்கை மக்கள் சபையின் எதிர்க்கட்சியினரால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருக்கிறது.

"இப்போதுள்ள நெருக்கடியான நிலையில், உண்மை போல் காட்சிதரும் இந்தக் குற்றச்சாட்டு, சிங்களவரின் உணர்ச்சிகளை, தமிழருக்கு எதிராகத் தூண்டுவதாக ஆகாதா?"

என்று, டாக்டர் என். எம். பெரீரா என்ற உறுப்பினர் இடித்துக் கேட்டிருக்கிருர்.

பிரதமர் பண்டாரநாயகா சபையில் இல்லாததால், அவருக்குப் பதிலாகப் பேசிய சி. பி. டிசில்வா என்ற மக்கள் சபை ஆளும் கட்சித் தலைவர், 'பிரதமரின் கவனத்திற்கு ஏற்கனவே இந்த விஷயம்கொண்டு வரப்பட்டது; அவர் இதுகுறித்து தக்க நடவடிக்கை எடுப்பார்,' என்று குறிப்பிட்டிருக்கிருர்,

தந்தி அடித்த மந்திரி, கிருபளானி, தமிழருக்கு விரோதமாகக் கருத்தறிவித்தமைக்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டாராம்!

மக்கள் சபையில் பேசிய வேறு சிலரும், 'ஒரு வெளிநாட்டு அரசியல் தலைவருக்கு, மற்றொரு நாட்டின் மந்திரி ஒருவர், தன் நாட்டின் மிக முக்கியமான ஒரு பிரச்சினை பற்றிய விஷயம் குறித்து தந்தி அடிப்பது முறையானதல்ல' என்பதையும் இடித்துரைத்திருக்கின்றனராம்.

திருச்சி மாநில மாநாடு

பாராட்டு விருந்து—விழா

திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டின் சிறப்பிற்குக் காரணமான வரவேற்புக் குழுவினரையும், அவர்களுக்கு ஒத்துழைப்புத் தந்து பணியாற்றிய தோழர்களையும், தொண்டர் படைத் தலைவர், தொண்டர் படையினர் ஆகியோருக்கும், பந்தல் அமைப்பு, ஒலிபெருக்கி, ஒளி அமைப்பு, உணவு விடுதி ஆகிய பணிகளில் ஈடுபட்ட தோழர்களையும, பொருட் காட்சிப் பணியில் தங்கள் திறமையைக் காட்டிய ஓவிய நண்பர்களையும், அதனை உடனிருந்து நிர்வகித்த தோழர்களையும், முப்பு அலங்கார பணியினை இனிது நிறைவேற்றித் தந்த ஓவியர்களையும், அவர்களுக்கு உதவியாயிருந்து பணியாற்றியத் தோழர்களையும், 'டிக்கட்' விற்பனை, தற்காலிகத் தலைமை நிலையப்பணி ஆகியவற்றைத் தக்க கவனத்துடன் நிறைவேற்றிய தோழர்களையும், மாநாட்டில் வருகை தந்த இலட்சக் கணக்கான மக்களுக்கு திருச்சி நகராட்சி மன்றம, திருச்சி மாவட்ட ஆட்சி மன்றம ஆகியவைகள் சுகாதார வசதி—தண்ணீர் 'சப்ளை' ஆகியவைகளில் செய்த உதவிகளையும் பாராட்ட, 4—6—56 அன்று திருச்சி தேவர் மண்டபத்தில் தேனீர் விருந்தும், பாராட்டு விழாவும் சிறப்புற நடைபெற்றது. இவ்விருந்தில் ஏறத்தாழ 500 பேர்களுக்கு மேல் கலந்து கொண்டனர்.

திருச்சி நகரசபைத் துணைத் தலைவரும், உறுப்பினர்களும, உள்ளூர் பிரமுகர்களும, வந்திருந்தனர்.

மாலை 5-30 மணிக்கு அண்ணு அவர்களும, பொதுச்செயலாளர், துணைப் பொதுச்செயலாளர், தோழர் ஈ. வெ. கி. சம்பத், அ. பொன்னம்பலனுர், எஸ். முத்து, பொனுர்-சுப்பிரமண்யம ஆகியோரும தேவர் மன்றத்திற்கு வந்தனர்; உடனே தேநீர்விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது.

பிறகு, பாராட்டு விழாவிற்கு பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களைத் தலைமை தாங்குமாறு மாநாட்

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
நாள் தினஇதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—6—'56 சனி

நம்பிக்கையூட்டிய சிறு துரும்பு!

கிணற்றில் மூழ்கிச் சாகும் முடிவை அடைந்துவிட்டவன், கையில் சிறு துரும்பு கிடைத்தாலும், அதைப் பற்றிப்பிடித்து சாவிலிருந்துத் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முயற்சிப்பது இயல்பாகும் என்பது பழமொழி.

மீளமுடியாத அச்சத்திற்கு ஆளாகி, விரைவான இருதயத் துடிப்புக்குப் பலியானவன் அதன் பேராபத்தான விளைவிலிருந்துத் தப்பிப் பிழைக்க, ஏதேதோ துணிவளிக்கும் சொற்களைப் பிதற்றுவான் என்பது அனுபவ உண்மை.

இந்த அவல நிலைக்கு கனம் காமராசர் இன்று தூரத் தப்பட்டிருக்கிறார் என்ற உண்மையை, அவருடைய திருச்சி அரசியல் பிதற்றல் வலியுறுத்துகிறது.

அச்சத்திற்கு ஆளானவன் கதியைப் போன்றதுதான் அழுக்காறுக்கு அடிமையாகி விட்டவனின் சொல்லும்-செயலும் இருந்திடும். அந்த இடத்திற்கு விரட்டப்பட்டு வேதனைப் பட்டுக்கொண்டிருப்பவர் அன்பர் ஆச்சாரியார் அவர்களேயாவார்.

முன்னையவர் காங்கிரஸ் அரசியல் அமைப்பைக் கைப்பற்றிக்கொண்டு, அதன் பலத்தின் நிழலில் தங்கி அரசியல் கூத்து ஆடிவருகிறார். பின்னையவரோ சுயஜாதி பத்திரிகைகளின் விளம்பர பலத்திலும், சொந்த புத்தியின் சூழ்ச்சி பலத்திலும் தனது மனம்போன போக்கில் அரசியல் நாடகம் ஆடிக் கிடக்கிறார்.

அச்சத்திற்கும், அழுக்காறுக்கும் முறையே அடிமைப்பட்டுக் கிடக்கிற தற்கால கனத்திற்கும், மாஜி கனத்திற்கும், தமிழ் நாட்டு அரசியலில் இனி இடமில்லை என்பதை, தமிழ் நாட்டு மக்கள் முழக்கமிடுகின்றனர். தங்கள் அரசியல் வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்திடும் அந்த முழக்கத்தை, இவ்விரு கனவான்கள் கேட்டும் கேளாதவர்கள்போல், அரசியல் உலகில் அமர்க்களம் செய்து வருகின்றனர். பரிதாபம்!

நமது கழகம் தேர்தலில் கலந்து கொள்வது என்ற முடிவை திருச்சிராபுரம் மாநாடு எடுத்திருக்கிறது. அதற்கான ஆயத்தப் பணி குறித்து நமது கழகக் காவலர்கள் இதுவரை சிந்திக்கக்கூட இல்லை. ஆனால், முதலமைச்சர் காமராசரோ, அம்முடிவைக் கேட்டதும் குலை நடுக்கம் கொண்டு கழுத்தறுபட்ட கோழிபோல் துள்ளித் துள்ளி விழுகிறார்.

'கழகத்தவர்கள் நாடகக்காரர்கள் ஆயிற்றே, அந்த நாடகக்காரர்களா நாடாள ஆசைப்படுகிறார்கள்! இராஜா—மந்திரி வேஷம் நாடகத்தில் போட்டு மகிழ்வதோடு அவர்கள் திருப்தி அடையக் கூடாதா?' எனக் கேலிமொழி பேசுவதின் மூலம், தமக்கேற்பட்டுள்ள அச்சத்தை மூடி மறைத்துக்கொள்ளப் பார்க்கிறார், அந்த நாடக அமைச்சராக நடிப்பதற்குக்கூட ஆற்றலற்றவராக இருந்தும் நாடா

ளும் வாய்ப்புப் பெற்றிருக்கிறோம் என்ற அகந்தையில், கனம் காமராசர்!

திராவிட நாடு பிரிவினையைக் கூறி மக்களிடம் ஆதரவு கோருவதைக் காட்டிலும, ஐந்தாண்டுத் திட்டத்தைத் தேர்தல் பிரச்சினையாகக் கொண்டு தேர்தலில் பங்குகொள்வதை தாம் வரவேற்கத் தயாராக இருப்பதாக முதலமைச்சர் முணுமுணுக்கிறார்.

நமது கழகத்தின் உயிர்நாடியான திராவிட நாடு பிரிவினையை தேர்தல் நேரத்தில் நாம மக்கள் முன்வைக்க இருப்பதினாலேயே, இரு ஐந்தாண்டுத் திட்டத்திலும் தென்னாட்டிற்கு வட நாட்டு ஏகாதிபத்தியம பட்டை நாமம் சாத்தி இருப்பதை நாம சொல்லாமல் இருக்கப்போவதில்லை. நமது தேர்தல் அறிக்கையில் அதற்குரிய இடத்தை அளிக்காமல் இருக்கப்போவதும கிடையாது.

திராவிட நாடு பிரிவினைக்கு எந்த அளவு முக்கியத்துவம கொடுக்கப்பெறுமோ, அதே அளவிற்குக் குறையாத வகையில்தான் ஐந்தாண்டுத் திட்டங்களில் நமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கும முக்கியத்துவம் கொடுக்கப்பெறும. தேர்தலில் காங்கிரஸ் கட்சியை முறியடிக்கும் மூலபலமாக அதுவே அமைந்துவிட்டாலும ஆச்சரியப்படுவதற்கில்லை.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களையும் மக்கள் முன் வைத்து, தென்னாட்டவர் பெற்றுள்ள ஏமாற்றங்களையும, இடர்பாடுகளையும எடுத்துக் காட்டி, நமமவரால் கிளப்பப்படவிருக்கும் ஆணித்தரமான விவாதங்களுக்கு, அரசியல் சூழ்நிலையால் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள இந்தத் திருப்பதி செம்மரப் பாவையால் பதிலளிக்க இயலாது என்பது உண்மையிலும உறுதியான உண்மையாகும. இன்று முதலே அதற்கான அறிவு தானம பெற இடையறாது முயலும்படி, இந்த கனவானை வேண்டிக் கொள்ளுகிறோம.

தேர்தலில் கழகம பங்கு கொள்ளப் போகிறதாமே என எண்ணுந்தோறும எண்ணுந்தோறும, இந்தக் கனவானுக்கு ஆவியே பிரிந்துவிடும்போல தெரிகிறது. இவர், இவ்வாறு அஞ்சி அஞ்சிச் சாகவேண்டாம. தேர்தலில், இறுதியான அரசியல் மரணத்தைத் தழுவிக்கொள்ளவாவது, இவர் உயிருடன் இருக்கவேண்டும என்பதே நமது விருப்பம.

நமது மாநாட்டு முடிவு விளைவித்த அச்சத்தின் காரணமாக, அரசியல் மரணத்தை மெள்ள மெள்ள நெருங்கிக் கொண்டிருக்கிற முதலமைச்சருக்கு, கொஞ்சம நம்பிக்கையூட்டும வகையில் ஒரு செய்தி கிடைத்திருக்கிறது.

அதாவது, நாட்டுப் பிரிவினையை ஒப்புக்கொள்ளாத அகில இந்திய அமைப்புகளான கம்யூனிஸ்டு கட்சியும, சோஷலிஸ்டு கட்சியும, நமது கழகத்துடன் தேர்தல் கூட்டு சேரா முடியாது என்ற நினைப்பே, அந்த நம்பிக்கையை முதலமைச்சருக்கு அளிக்கிறது.

அடுத்துவரும் பொதுத் தேர்தலில், நமது கழகத்தின் பிரிவினை முழக்கத்தை ஒரு புகலாகக் கொண்டு, கம்யூனிஸ்டு கட்சியும், காங்கிரஸ் கட்சியும கூட்டாக இணைந்து நமது கழக அபேட்சகர்களுக்கு எதிராகக் கிளம்புவது எதிர்பார்க்கக்கூடியதேயாகும். அதில் வியப்புக்குரியது ஒன்றுமில்லை.

முடவனும் முடவனும் சேர்ந்து அணிவகுப்பது காட்சிக்கு மட்டுமல்ல—கருத்துக்கும் அருமையான விருந்தாகத் தானே அமையும்?

கம்யூனிஸ்டு கட்சியைப் போன்று, அவ்வளவு மோசமான நிலையில், 'விரோதிக்கு விரோதி நண்பன்' என்ற அதிகார அரசியல் நீதியில், காங்கிரஸ் கட்சியுடன் தேர்தல் கூட்டு சேர சோஷலிஸ்டு கட்சி முன்வராது என்பதும் எதிர்பார்க்கக்கூடியதாகும்.

எது எப்படியானாலும், நமது மாநாட்டு முடிவினால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து ஆறுதல் பெறுவதற்கு, மற்ற அகில இந்திய கட்சிகளின் ஒத்துழைப்பு இல்லாமலும், அதற்கு பதிலாக அவைகளின் பலத்த எதிர்ப்புக்கு எதிராக, நமது கழகம் மட்டுமே தனித்திருந்து காங்கிரஸ் கட்சியைத் தேர்தலில் எதிர்க்க இருக்கிறது என்ற செய்தி, முதலமைச்சருக்குப் பெரிதும் ஆறுதல் தந்திருக்கிறது.

நீரில் மூழ்கி சாக இருப்பவனுக்கு சிறு துரும்பு கிடைத்ததுபோல, நமது கழகம மட்டுமே தனித்து இருந்து தேர்தலில் காங்கிரஸ் கட்சியை எதிர்த்துப் போரிடும் என்ற செய்தி, தாம் கொண்ட அச்சத்திலிருந்து மீட்க முதலமைச்சருக்கு அருந்துணையாகக் கிடைத்திருக்கிறது. ஏதோ சிறிது நேரத்திற்காவது அச்சம் நீங்கி வாழ வாய்ப்புப் பெற்றாரே முதலமைச்சர் என்பதற்காக, நாமும் மகிழ்கிறோம்.

செயற்கை முறையில் மழை பெய்விக்க முயற்சி

சோதனையைத் தொடர்ந்து நடத்த சென்னை சர்க்கார் ஏற்பாடு

சென்னை, ஜூன் 7—

மேலை நாடுகளில் மழையின்மையைப் போக்கச் செயற்கை முறையில மழை பெய்யச் செய்வது போலவே, சென்னை அரசினரும் இரண்டாண்டுகளாக செயற்கை முறையில் மழை பெய்யச் செய்ய நடைபெற்ற சோதனையின் விளைவுகள் ஓரளவிற்கு மனமகிழ்ச்சியையும, ஊக்கத்தையும ஊட்டும வகையில் அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சென்னை சர்க்கார் இம்முறையை மேற்கொண்ட தலைமைக் கேந்திரம்; தரையில 'கால்ஷியம குளோரைட்' என்ற இரசாயனப் பொருளை அதிக வெப்பத்தின் மூலமளாவது அதன்புகையை விஞ்ஞான முறையில மேலே அனுப்பப்பட்டது; அது மேகத்தின்மீது பட்டவுடன் மழை பெய்ததாம.

சென்னை அரசினர் இவ்வாண்டு இத்திட்டத்திற்கென ரூ. 6,000 அனுமதித்துள்ளனராம.

6,000 அல்லது 7,000 அடி உயரமுள்ள மலைப் பிரதேசங்களை இச்சோதனைக்கு தக்க இடமென்றும, 'கால்ஷியம் குளோரைட்' எரிக்கும் சோதனை தொடர்ந்து நடத்தப்படுமென்றும், 'பலூன்'களை அனுப்புவது, விமானத்திலிருந்து இரசாயனப் பொருட்களைத் தூவுவது போன்ற முறைகள் பற்றியும ஆலோசிக்கப்படுகிறதென்றும் தெரிய வருகிறது.

'காங்கிரசைப் பிடித்துள்ள கடும் நோய் என்ன?'

'சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட பதவிப் பித்துத்தானே?'

'புற்று நோயுக்கு மருந்து உண்டா?'

'காங்கிரசின் நோயைக் குணப்படுத்த முடியாது'

"கடும் நோயால் காங்கிரஸ் பீடிக்கப்பட்டுள்ளது என்று பிரதம மந்திரி நேருஜி கூறுகிறார். நோய் வந்த பின்பு அவதிப்படுவதைவிட, நோய் வராமல் தடுப்பதுதான் சிறந்தமுறை. இதற்காக, நோய் வந்த பின்பு 'தடுக்காமல் போய் விட்டோமே' என்று சஞ்சலப்படுவதிலும் பயனில்லை.

"நோய் வந்த பின்பு மூன்று அம்சங்கள் குறித்து ஆராய வேண்டும். நோய்வரக் காரணம் என்ன? வந்துள்ள நோய் எத்தகையது? மருந்துக்குக் கட்டுப்படக் கூடியதா? வியாதிக்கு எந்த சிகிச்சை முறை ஏற்றது?

"சிலவகை வியாதிகளில்தான் இக்கேள்விகளுக்கும் பதில் கிடைக்கும். உதாரணமாகப் புற்று நோய்க்கு எந்த முறையில் சிகிச்சை அளித்தாலும் முடிவு ஒன்றுதான் ஏதோ சாந்தி பரிகாரமாக சில சிகிச்சை முறைகளைக் கைக்கொள்வார்கள்; அதனால், விமோசனம் கிடைக்கும் என்று மட்டும் சொல்ல முடியாது.

"காங்கிரசைப் பிடித்துள்ள வியாதி, புற்றுநோயைவிடக் கொடுமையானது. சுயநலத்தை அடிப்படையாகக் கொண்ட 'பதவிப் பித்து'தான் அந்த வியாதி! இதனால், மற்றக் கட்சியினருக்கு 'இது இல்லை' என்று நான் சொல்லவில்லை.

"காங்கிரஸ் பதவியிலிருப்பதால் பதவிப் பித்தர்கள் எவ்வளவு பேர் நுழைந்திருக்கிறார்கள்—எவ்வளவு பேர் நுழைய முயற்சிக்கிறார்கள் என்ற அம்சமும் வெளியே தெரிந்துவிட்டது. மற்றக் கட்சிகளுக்கு இன்னும் அந்தச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லை; சந்தர்ப்பம் மட்டுமிருக்குமானால் சுயநலத்திலும், பதவிப் பித்திலும் சதவிகித வித்தியாசம் மட்டுமே காணப்படும்.

"'அரசியல் பொதுவாழ்வில் நாணயம் கெட்ட கும்பல் பெருகிவிட்டது' என்று, ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் வருத்தப்படுகிறார். நாணயம் கெட்ட போக்கைப் பார்த்து, புத்தரைப்போல் இவரும் வெளியேறியவர். அரசியலில நல்லவர்களுக்கு இடமில்லை; நாணயஸ்தர்களுக்கு இடமில்லை ஒருகாலபாரும உள்ளே புகுந்து புனிதப்படுத்த முயற்சித்தாலும வெளியே தள்ள அங்கு ஏராளமான ஒரு கும்பல் காத்துக்கொண்டிருக்கும்!

"பதவிப் பித்துக்கும், சுயநலத்திற்கும் சிகிச்சை முறை என்ன? புற்றுநோய்க்கு எப்படி மருந்தில்லையோ, அதேபோன்று இதற்கும் மருந்தில்லை.

"மேக வியாதியால் பீடிக்கப்பட்டவன், அதை வெளியே சொல்லமாட்டான். இதேபோன்று பதவிப் பித்து, சுயநலம் போன்ற வியாதிகளால் பீடிக்கப்பட்டவனும் அவைகளை வெளிக்காட்டமாட்டான். ஆகவே, இந்த விவகாரத்தில் யாருக்கு வியாதி பீடிக்கப்பட்டுள்ளது? யாருக்கு வியாதி இல்லை?—என்று கண்டுபிடிப்பதே மிகவும் சிரமம்.

"அரசியல் கட்சிகள் மக்களின் பொதுநல ஸ்தாபனங்களாக இருக்க வேண்டும். அதற்குப் பதிலாக. மந்திரி பதவிகளுக்கு வெறும் கூடாரமாக மாறிவிடக் கூடாது.

"பாலைவனக் கூடாரத்தில் ஒட்டகம் நுழைந்த கதை எல்லோருக்கும் தெரியும். சுயநலத்திற்கும், பதவிப் பித்திற்கும் ஒருவர் பின் ஒருவராக நுழைகிறார்கள்; கடைசியில கூடாரத்திற்கே ஆபத்து வந்துவிடுகிறது. ஒண்டவந்த பிடாரி ஊர் பிடாரியை விரட்டிய கதைதான்!

"ஐந்து வருடங்களுக்கு முன்பு நாசிக் காங்கிரசின்போது, 'காங்கிரசுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யப்போகிறேன்; ஸ்தாபனத்திற்கு புதுஇரத்தம் பாய்ச்ச வேண்டும்' என்றெல்லாம், நேருஜி பேசினார். புது இரத்தம் பாய்ச்சியும், அதிர்ச்சி வைத்தியம் புரிந்தும் கடும் வியாதி இன்னும் போகவில்லை!

"பம்பாயில் கௌரவ 'டாக்டர்' பட்டம் பெற்றுக் கொண்டதும் 'விஷயம் தெரியாதவர்கள் என்னிடம் வைத்தியத்துக்கு வந்துவிடுவார்கள்' என்று நேருஜி குறிப்பிட்டார். சிகிச்சைக்குப் புதிதாக யாரும் வரவேண்டியதில்லை; ஏற்கனவே உள்ளவர்களுக்கு பதவிப் பித்திலிருந்தும், சுயநலத்திலிருந்தும் சிகிச்சை செய்தால் அதுவே போதுமானது; அப்போதுதான், அரசியலில் உள்ள இந்த விஷக் கடி, மற்ற இடங்களுக்கும் பரவாமல் தடுக்கலாம்.

"அரசியலில் டாக்டர்கள் அதிகமாக ஈடுபடவேண்டுமென்று செரியன் கூறுகிறார். டாக்டர்களின் அரசியல் பிரவேசத்தாலாவது கடுமையான வியாதிநீங்கினால் அதுவே பெரும் புண்ணியமாக இருக்கும்.

"'டாக்டர்களுக்கே அந்தவியாதியிருந்தால் பிறகு விமோசனத்திற்கு வழி என்ன சார்?...?' என்று என் ஆபீஸ் பையன் வேறு அர்த்தமற்ற கேள்வியைக் கேட்கிறான்."

—என்று 6-6-56 'நவ இந்தியா' இதழில், 'ஊர்வம்பு' என்ற பகுதியில் 'யு ஆர்.' என்பவர் எழுதியுள்ளார்.

இந்தியாவின் ஏற்றுமதிகள்

ரூ. 41 கோடி அதிகரிப்பு

புதுடில்லி, ஜுன் 8—

இந்தியாவின் ஏற்றுமதிகள் 1955-ம ஆண்டில், முந்திய ஆண்டைவிட ரூ 41 கோடி அதிகமானதென்று கூறப்பட்டிருக்கிறது.

குறிப்பிடப்படும் ஆண்டில், ரூ. 604 கோடி பெறுமானமுள்ள சரக்குகள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்டனவாம.

இறக்குமதிகள், 1954-ல் ரூ. 616 கோடி ரூபாயிலிருந்து 1955ல் ரூ 644 கோடி ரூபாய்க்கு உயர்ந்தனவாம.

பரிசீலனை வருடத்தில் மொத்த வர்த்தகத்தின் மதிப்பு 1954-ல ரூ. 1,179 கோடியிலிருந்து 1955-ல ரூ. 1,248 கோடி ரூபாய்க்கு உயர்ந்ததாம்

கள்ளக்குறிச்சி தோழர்கள் வழக்கு

மீண்டும் ஒத்திவைப்பு

கள்ளக்குறிச்சி துப்பாக்கிப் பிரயோகத்தை யொட்டி நடைபெறும் வழக்கு, இடையில் இரண்டொருமுறை தள்ளிவைக்கப்பட்டு, மீண்டும் 5-6-56-ல் நடைபெற்றது.

அன்று, அரசாங்கத் தரப்புச் சாட்சிகளாக இரு கான்ஸ்டபிள்கள், சப்-இன்ஸ்பெக்டர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அரசாங்க டாக்டர், ஜ. கிரியா சாயபு ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். மீண்டும் வழக்கு 8-6-56-க்கு ஒத்திவைக்கப்பட்டது.

‘தமிழர்கள் கடலால் பிரிக்கப்பட்டிருப்பினும், அவர்களின் கலை-பண்பாடு-மொழி பிரிக்கப்படவில்லை’

‘தமிழ் பேசும் மக்கள் எங்கிருப்பினும், மொழிக்கு ஆபத்து ஏற்பட இடந்தர மாட்டார்கள்’

தமிழ்ச்சங்கப் பொன்விழாவில் கந்தையா வைத்தியநாதன் கருத்துரை

மதுரையில் நடைபெற்ற தமிழ்ச் சங்கப் பொன்விழா ஏழாம் நாள் இயல் அரங்கிற்குத் தலைமை தாங்கி, இலங்கை திரு. கந்தையா வைத்தியநாதன் அவர்கள் பேசியதாவது :—

“தமிழ்ச் சங்கம் தோன்றிய மதுரை நகரிலேயே பொன் விழா நடைபெறுவதானது மகிழ்ச்சிக் குரியதாகும் தமிழ் மொழியானது மிகவும் பழமையானது. தமிழ்க் கலைகளில், காண வேண்டிய வைகள் இன்னும் ஏராளமாக இருக்கின்றன. அழகிய தேரை, நகரின் பல தெருக்களிலும் இழுத்துச் சென்று வெற்றிகரமாக இருப்பிடம் சேர்ப்பதைப் போன்று, தமிழ் என்ற தேரையும் கடந்த ஆறு நாட்களாக நகரின் பல தெருக்களிலும் இழுத்துச் சென்று இறுதியில் வெற்றிகரமாக இருப்பிடம் கொண்டுவந்து சேர்த்துவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

“தமிழை முன்னேற்றி வைக்க வேண்டுமென்று திரு பி. டி இராசன் அவர்கள் ஆவம்கொண்டதாகினக்க அதை சிறப்படையச் செய்வார் என்றே கருதுகிறேன்.

“எந்த நாட்டிலாவது தமிழ் மொழிக்கு ஆபத்து ஏற்படுமானால், தமிழ் மொழி பேசும் மக்கள் எங்கேயிருந்தாலும் அவர்கள் சும்மாயிருக்கமாட்டார்கள்.

“தமிழகத்தில் ஆறு நாட்களாக நடைபெறும தமிழ்ச் சங்கப் பொன் விழாவைக்கண்டு இலங்கை மக்கள் பெருமகிழ்ச்சி அடைந்துள்ளார்கள்.

“இரண்டாம் தமிழ்ச் சங்கம், யாழ்பாணத்திற்கும்—மதுரைக சோலிலுக்குமிடையே உள்ள இடத்தில் இருந்திருக்கலாம்; பின்னல் அது, கடல் கொள்ளப்பட்டிருக்கலாம் இருபகுதியிலும் வளர்ந்து வரும் தமிழர் கடலால் பிரிக்கப்பட்டிருந்தாலும், அவர்களுடைய, கலை, பண்பாடு, மொழி ஆகியவை பிரிக்கப்படவில்லை.

“தமிழக எல்லையில் ஏற்பட்டுள்ள மாறுதல்களைக் கண்டு இலங்கை வாழ் தமிழர்கள் திகில் கொண்டுள்ளனர். ஒரு காலத்தில் ஆப்பிரிக்கா வரையிலும் பரவியிருந்த தமிழகம் இன்று குறுகி, சுருங்கி, வடக்கே வேங்கடத்தையும் இழந்து நிற்பதைக் கண்டு இலங்கை மக்கள் கலக்கமடைகிறார்கள்.

“மூன்றும் நூற்றாண்டில் இலங்கையை அரசாண்டவா, திருவள்ளுவரோடு நெருங்கிய தொடர்பு கொண்ட நண்பராக இருந்திருக்க வேண்டும். வள்ளுவர் பொருட்பாலில வகுத்துள்ள இலக்கணத்தின்படியே அவர் அரசியற்றி வந்தார். அந்தக் கணக்கின்படி, ‘தமிழ் நாடு சிங்களத்துடன் தொடர்பு கொண்டது — 1 500 ஆண்டுகளுக்கு முன்பு’ என்று கணக்கிடலாம.

இலங்கையில் இன்று தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது. அதை எதிர்த்து தமிழர்கள் அறப்போர தொடுத்துள்ளனர். ஆங்கிலேயர் காலத்தில தமிழும், சிங்கள மொழியும் இலங்கையில சம மதிப்புடன விளங்கின; ஆனல், இன்று, அப்படிப்பட்ட நிலைமாறி, ‘சிங்களம் மட்டும்தான் ஆட்சி மொழியாக வேண்டும்’ என்று சிங்களவர்களால் அதிகாரத்திற்கு வந்துள்ளவர்கள் தீர்மானித்துள்ளனர்.

“அவர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாவில் தமிழின் பெயரே காணப்படவில்லை; அதுவே போதுமானது என்று நான் கருதுகிறேன் ஏனெனில் பிச்சை போட்டு நாயை ஏவி விரட்டுவதைவிட, பிச்சை போடாமலே விரட்டுவது சிறந்ததல்லவா? தமிழர்களையும், சிங்களவர்களையும் சேர்த்து பிணைத்துள்ள தமிழ் மொழியைப் புறக்கணித்துவிடுவார்கள் இலங்கை அரசாங்கத்தார் என்று நான் எதிர்பார்க்கவில்லை. அப்படியே அவர்களால் தமிழ் மொழி புறக்கணிக்கப்படுமானல் அதனல் தமிழ் மொழி நசித்துப் போகும் என்று நாங்கள் எண்ணவில்லை.

“தமிழைத் தொலைத்துவிடுவதால், தங்கள் மொழி முட்டின்றி வளர்ச்சியுறும் என்று பகற்கனவு காணும் சிங்கள மக்கள் தங்கள் மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லின் பிறப்பையும், வரலாற்றையும் நடுநின்று ஆராய்ந்தறிந்துகொள்ள வேண்டிய காலம்வரும் அப்பொழுதாவது அவர்கள் வடஇந்திய மொழிவல்லுநர்களைப் போன்று தமிழைக் கற்கவேண்டியது ஏற்படும். சிங்கள மொழியில் தமிழ் அடியாகப் பிறந்த பிற சொற்களும் தமிழ்ச் சொற்களும் எவ்வளவு கலந்துவிட்டன என்பதை அவர்கள் அறிந்துகொள்வார்கள்.”

சில்லரை வாக்காளராகப் பதியாதது ஏன்?

தேர்தலில் கலந்துகொள்ள ஊர்மக்கள் மறுப்பு!

மதனபள்ளியை அடுத்து முப்பது கல் தொலைவில் காம்பாலி என்ற சிற்றூர் இருக்கிறது; அங்கு ஊராட்சி மன்றத் தேர்தல் நடைபெற, ஆந்திர அரசாங்கம் தேதி குறித்திருந்தது. தேர்தலில் போட்டியிட விரும்பும் அபேட்சகர்கள், குறித்த நாளிலும் தங்கள் மனுக்களைச் சமர்ப்பிக்காது, இருந்து விட்டனர்.

அதன் விளைவாக ஊராட்சி மன்றத் தேர்தல் நாள் குறிப்பிடாமலே ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

ஊராட்சி நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கத் தாங்கள் விரும்பியிருந்த சில ஊராவாசிகளை, வாக்காளராகப் பதியத் தவறிவிட்டிருப்பதே, தாங்கள் தேர்தலில் கலந்துகொள்ளாததற்குக் காரணம் என, தேர்தல அதிகாரியிடம் அவ்வூர மக்கள் விளக்கிக் கூறியுள்ளனர்.

ஆந்திர மாகாணத்தில் இது போன்ற சம்பவம் ஏற்கனவே ஒரு முறை வேறு ஒரு சிற்றூரில் நடைபெற்று இருக்கிறது.

மாலுமிகள் தங்க விடுதி

ரூ. 5 இலட்சம் செலவில் சென்னைகடற்கரையில் அமையும்

சென்னை, ஜூன் 7—

மாலுமிகளின் தங்கும் விடுதிக்காக ஐகோர்ட் கடற்கரையில், ரூ 5 இலட்சம் செலவில், எல்லாப் புதிய வசதிகளும் கொண்ட, ஒரு மூன்று மாடிக் கட்டிடம் கட்டப்படும.

இந்த விடுதியில் 200 படுக்கைகளும், குடும்பத்துடன் நகரில் தங்கும் மாலுமிகளின் வசதிக்காக சிறு குடில்களும, ஒரு நீச்சல் குளமும் இருக்கும என்று கூறப்படுகிறது.

காந்தியாராக நடிக்கக் கருதிய அப்பாவி!

பல்லைப் பிடுங்கிக் கொண்டும் தோற்றுப்போன பரிதாபம்!

உதகை, ஜூன் 7—

“காந்தியார்போல் வேடமிட்டு நடிக்கக் கருதினை ஒரு அப்பாவி! அதற்காக, தனது வேட்டியை மடித்து முழங் காலுக்கு மேல் அணிந்துகொண்டான்; இடுப்பைச் சுற்றி ஒரு சிறு காலங்காட்டியைத் தொங்கவிட்டுக்கொண்டான். அப்பொழுதும, தான் காந்தியாராகிவிட்டதாக அவனுக்கு மன நிறைவு ஏற்படவில்லை. எனவே, ஒரு பல் வைத்தியரிடம் சென்று, தனது முன் இரு பற்களையும பிடுங்கிகொண்டான். அதன் பிறகும் அவனல காந்தியாக முடியவில்லை.”

இத்தகவலை சென்னை கவர்னர் பிரகாசா அவர்கள் கூறியுள்ளார்.

பலதுறை கல்விக்கூடங்களின் ஆசிரியா பயிற்சிப் பள்ளி மாநாட்டில் தலைமை தாஙகிய நேரத்தில தான், சிலர் காந்தியாரைப்போல் நடிக்க முயற்சிக்கின்றனர் எனக் குறிப்பிட்டு, அதற்கு எடுத்துக்காட்டாக மேற்குறிப்பிட்டுள்ள சம்பவத்தை அவா குறிப்பிட்டார்.

காந்தியார் போன்ற வேடப் பொருத்தம் அவனுக்கு அமைந்திருந்தபோதிலும், காந்தியாரின் உணர்வை நடித்துககாட்ட முடியாமல் அவன் தோற்றுப்போனன் என்ற உண்மையை கவர்னர் சுட்டிக்காட்டினா.

* *

‘நம் நாடு’

நான்காம் ஆண்டு துவக்கவிழா மலர்

(12 பக்கங்கள்)

★

15—6—56-ந் தேதியன்று நாடெங்கும் கிடைக்கும்

விலை அணு 2.

★

அண்ணு, மற்றும், கழக எழுத்தாளர் பலரும் எழுதுகின்றனர்.

* *

பீகார் — வங்கம் மோதுதல்!

முதன் மந்திரி கிருஷ்ண சின்ஹ துவக்கிவைக்கிறர்

பாட்னு, ஜூன் 7—

மாநில சீரமைப்புக் குழுவின் சிபாரிசுப்படி, பீகாரின் சில பகுதிகளை வங்கத்திற்கு மாற்றுவதை, பீகார் முதலமைச்சர் டாக்டர் கிருஷ்ண சின்ஹ, பம்பாயில், காங்கிரஸ் மேலிடத்தாரிடம் பலமாக மறுத்ததாகத் தெரிகிறது.

பொதுமக்கள் வாக்கெடுப்பின்றி எப்பிரதேசத்தையும் மாற்றக்கூடாதென அவர் கூறியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதுபற்றி பீகார் முழுவதும் அதன் தொடர்புள்ள பகுதியிலும் மக்கள்மிகவும் கொதிப்படைந்திருப்பதாக அவர் சுட்டிக் காட்டினாராம்.

பெண்களுக்குப் பயிற்சிக் கல்லூரி

கோவையில் நிறுவப்படும்

சென்னை, ஜூன் 7—

வரும் கல்வி ஆண்டிலிருந்து கோயம்புத்தூரில் பெண்களுக்கென அரசினர் பயிற்சிக் கல்லூரி ஒன்றைத் திறப்பதற்கு அரசியலார் ஒப்புதல் அளித்துள்ளனர்.

இக்கல்லூரியில் 75 மாணவிகளோ, அலலது பல்கலைக் கழகம் நிர்ணயிக்கும் குறைந்த எண்ணிக்கையுடைய மாணவிகளோ அனுமதிக்கப்படுவராம். விருப்பப பாடங்களாக ஆங்கிலம், பொது விஞ்ஞானம், தமிழ், கணிதம், சமூகக கல்வி ஆகியவை இருக்குமாம்.

நகரப் பகுதி சேரிகளை ஒழிக்கத் திட்டம்

சென்னை, ஜூன் 8—

நகரப் பகுதிகளிலுள்ள சேரிகளை ஒழிப்பதற்கான திட்டமொன்றை இந்தியப் பேரரசினர் தயாரித்திருக்கிறார்களாம். இத்திட்டத்தின்படி இந்தியப் பேரரசு மாநில அரசினருக்கு நிதி உதவி செய்யுமாம்.

மொத்தச் செலவில் கால் பங்கு மானியமாகவும், 50 சதவிகிதம் கடனாகவும் கொடுத்துதவும் என்றும், மீதி கால் பங்கை மாநில சர்க்கார்கள் சொந்த வசதிகளிலிருந்து ஈடுசெய்யவேண்டுமென்றும் இந்திய சர்க்கார் மராமத்து-குடியிருப்பு இலாகா மாநில சர்க்கார்களுக்கு கடிதமனுப்பியுள்ளது என்றும, உடனே திட்டங்களை தயாரிக்குமாறு சென்னை உத்திரவிட்டுள்ளது என்றும் தெரியவருகிறது.

தொழிலாளர் அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டம்

தென்மாவட்டங்களிலும் அமுல்

மதுரை, ஜூன் 7—

மதுரை, அம்பாசமுத்திரம், தூத்துக்குடி ஆகிய இடங்களிலுள்ள தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களுக்கு ‘இன்சூரன்ஸ்’ திட்டம் விரைவில் அமுலாக்கப்படவிருக்கிறது. 6,000 - பெண் தொழிலாளர்கள் உட்பட சுமார் 37,500 பேர் இத்திட்டத்தின் பயனைப் பெறுவர்.

இத்திட்டம் இவ்விடங்களில் அமுல்செய்யப்பட்டதும், சென்னை மாநிலத்தில் முழுவதுமாக 1 32 000 பேர்கள் இத்திட்டத்தின் கீழ் இருப்பர் எனத் தெரிய வருகிறது.

புதுவையில் மருத்துவ சுகாதாரத் திட்டம்

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் புதுச்சேரியின் மருத்துவ, சுகாதாரத் தேவைகளை ஆராய்வதற்கென திட்டக் குழுவினல் அமைக்கப்பட்டுள்ள குழுவின் சிபாரிசுகள் ஏற்கப்படின், புதுவையின் பொது முன்னேற்றத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ 5 கோடியில் மருத்துவ, சுகாதார திட்டங்களுக்காக ரூ 1 கோடி செலவிடப்படும் எனத் தெரியவருகிறது.

வேலையற்றோர் தொகை அதிகரிக்கிறது!

1956 ஏப்ரல் மாதத்தில், மொத்தம் 1,83,574 பேர் வேலை தேடித்தரும் நிலையங்களில் வேலை உதவி கோரி பெயர் பதிவு செய்துக் கொண்டனர். அதற்கு முந்திய மாதத்தில் பெயர் பதிவானவர்களின் மொத்த எண்ணிக்கை 1,21 399.

பிரிட்டிஷ் காலனிக் கொள்கையின் மிருகத்தனம்!

பதவியிலிருந்து விலகுமுன் மார்ஷல் கண்டனம்

புதிய மந்திரிசபை அமைக்க தொழிலாளர் முன்னணித் தலைவருக்கு அழைப்பு

சிங்கப்பூர், ஜூன் 7

சிங்கப்பூரில், டேவிட் மார்ஷல் தலைமையில் இயங்கிக் கொண்டிருந்த மந்திரிசபை இன்று தனது இராஜிநாமாவைத் தாக்கல் செய்ததை ஒட்டி, கவர்னர், லிம்யூஹாக் என்ற தொழிலாளர் முன்னணியின் தலைவரை, மந்திரிசபை அமைக்குமாறு கேட்டுக்கொண்டிருக்கிறா எனத் தெரியவருகிறது.

42 வயதான லிம, மார்ஷல் மந்திரி சபையில் உதவி முதன் மந்திரியாக இருந்தார்.

தான் மந்திரிசபை அமைக்க ஒப்புக்கொண்டது குறித்து லிம், பத்திரிகையாளரிடம் பேசுகையில், தான் மீண்டும் லண்டன் சென்று சிங்கப்பூர் சுதந்திரம் பற்றி பேசுவதற்கு வாய்ப்புத்தர வேண்டும் என்ற நிபந்தனையோடுதான் பதவி ஏற்கச் சம்மதித்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார். லிம, காலைய தினம் கவர்னருக்கு பதில் தருவார் என்று தெரியவருகிறது.

முன்பாக, கவர்னர், மார்ஷல் தாக்கல் செய்த இராஜிநாமாவை ஏற்றுக் கொண்டிருக்கிறா.

தான் முதன் மந்திரி என்ற முறையில், கடைசியாக மார்ஷல் சட்ட சபையில் பேசும்போது, ‘புதிய பிரிட்டிஷ் காலனிக் கொள்கையின் ஆபாசமான மிருக வெறியைத்தான் லண்டன் சுதந்திரப் பேச்சுக்களில் ஏற்பட்ட தோல்வி உலகத்திற்கு எடுத்துக் காட்டுகிறது,’ என்று குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணாவின் அறைகூவல்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று நினைக்கும் போது, 'எப்படிப்பட்ட நாடு நம்முடையது?' என்றும் எண்ணுகிறது! அப்படி எண்ணும் போது, உண்மையில் நமது மனம் பூரிப்பு அடையத்தான் செய்யும்!

"திருவோட்டை இழந்துவிட்ட பண்டாரம்கூட, இழந்துவிட்ட திருவோட்டை தேடித்தேடி அலைவதை நாம் காண்கிறோம்; 'என்ன, பண்டாரம்? இந்தப் பாழும் மண்டபத்தில் இவ்வளவு பதைக்கிறாய்?' என்று கேட்டால், 'ஐயா, திருவோடு வைத்திருந்தேன், காணவில்லை; அதனைத் தேடியலைகிறேன்,' என்று கூறுகிறான்; 'திருவோட்டிற்கா?' என்று கேட்டால். 'அதுதானே எனக்குத் தேவை?' என்கிறான்.

"பண்டாரத்திற்கு திருவோடு எவ்வளவு முக்கியமோ, அதைவிடவாவது முக்கியமல்லவா ஒரு மனிதனுக்கு நாடு? காமராசர் சொல்கிறார்—'அது எக்கேடு கெட்டால் என்ன? ஒரு பகுதி எங்கிருந்தால் என்ன? அதனால் என்ன கெட்டு விடும்?'—என்று!

"நான் சென்னையில் பேசும் போது ஒன்று கூறினேன்; அது பற்றி அவருடைய நண்பர் என்னிடம்வந்து, 'நான் காமராசரைப் பற்றித் தாழ்வாகப் பேசிவிட்டேன்' என்று கூறினர்.

"அரசியலிலேயே தனிப்பட்டவர்களைத் தாழ்வாகப் பேசக் கூடாது—என்ற பண்பைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற அதிகமான அக்கறை கொண்டிருப்பவன்தான்; ஆகவே, காமராசரைக்கூட நான் தாழ்வாகப் பேசமாட்டேன்; எடுத்துக்காட்டிற்காக ஏதேனும் கூறினால், அதில் வரும் உவமையை அவர்களே எடுத்துக் கொள்ளக்கூடாது

'சென்னையில் நான் கூறினேன்—'நாய் இருக்கிறதே நாய்; அதுகூட, மண் வளத்தை அறிந்து கொள்வதை நாம் பார்க்கிறோம்; நாய்கூட மண்வளத்தை அறியும் போது நாட்டை ஆளுகிற நாயகர்களுக்கு அது தெரியவில்லையே! என்ன செய்வது?'—என்று!

"அதற்குக் காமராசர் தன்னுடைய நண்பர் மூலம் என்னிடம் சொல்லியனுப்பினர் — 'என்ன, இப்படி 'நாயே, பேயே என்றெல்லாம் பேசுகிறார்?'—என்று!

"நான், காமராசரை அப்படிச் சொல்லமாட்டேன்; அப்படிச் சொல்வது அரசியல் கண்ணியத்திற்குக் குறைவானது என்பதை நான் நன்கு உணர்ந்திருக்கிறேன் கடந்த 15—20 ஆண்டுகளாக அந்தக் கண்ணியத்தைக் கடைப்பிடித்திருக்கிறேன். அவர்கள் என்னை அந்த அளவுக்கு வேறு பக்கம் திருப்பினாலும் கண்ணியத்திலிருந்து வழுவமாட்டேன் ஆனால், உவமைக்கு நான் சொல்லுவதானால், அதை அவர்கள் தங்களுக்கு என்று எடுத்துக் கொள்ளக் கூடாது.

"நமமுடைய நாடு அத்தகு வளம் பொருந்தியது என்ற காரணத்தினால்தான், நாமே இந்தக் காரியத்தில் ஈடுபட்டோம்.

"இதில் சர் ஆர். கே. சண்முகம் செட்டியார் ஈடுபட்டிருக்கலாம் —ஆனால், அவர் இதை அத்தனை பெரிய வேலை என்று கருதவில்லை போலும்!

"சர். ஏ. இராமசாமி ஈடுபடலாம் —ஆனால், அவ்வளவு பெரியவருக்கு இது சிறுகாரியமாகத் தெரியலாம்!

"சர் இலட்சுமணசாமி ஈடுபடலாம் —ஆனால், தனக்கிருக்கிற வேறு பெரும் வேலைகளினூடே, 'இது தேவை இல்லை' என்று இருக்கலாம்!

"இராசகோபாலாச்சாரியார் ஈடுபட்டிருக்கலாம் — ஆனால், அவர் 'இது தனக்கு எதிர்காலத்தில் ஆபத்தாக முடியும்' என்ற அச்சத்தாலே ஈடுபடாமலிருக்கக்கூடும்!

"இப்படி அவர்கள் எல்லாம் ஈடுபடாத காரணத்தாலேயேதான், சாமான்யர்களான நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஈடுபட்டு, எட்டு ஆண்டுக் காலத்தில் நாட்டில், மக்களைத் தேடித் தேடித் திரிந்து. கொள்கைகளைப் பரப்பிவிட்டு, நாட்டைப் பார்க்கும்போது, ஒரு சின்னஞ்சிறு கதைதான் கவனத்திற்கு வருகிறது.

"ஒரு எலிக்கு, 'தன் மகள் குஞ்சுக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும்' என்ற ஆசை வந்ததாம் —'நம்முடைய குஞ்சுக்கு சாதாரண எலியைக் கல்யாணம் செய்து வைத்தால் போதாது; நல்ல வலிவுள்ள ஆற்றல் படைத்த ஒருவனைத்தான் கல்யாணம் செய்ய வேண்டும்; யாருக்கு ஆற்றல் இருக்கிறது என்று யோசித்து மணம் முடிப்போம்' என்று கருதிற்றாம், கதையில் வரும் எலி!

"அந்த எலி சூரியனிடத்தில் போயிற்றாம் — 'சூரியனே, சூரியனே! நீ மிக்க ஆற்றல் படைத்தவனல்லவா? நீ என்னுடைய மகளைக் கல்யாணம் செய்துகொள்' என்று கேட்டதாம்; சூரியனோ, 'பைத்தியக்கார எலியே! நான எவ்வளவு ஆற்றலுள்ளவனானாலும், கன்னங் கரேல் என்ற மேகம் வந்தால் என்னை மூடிவிடுகின்றது; எனவே, என்னைவிட ஆற்றல் படைத்தது மேகம்; மேகத்தைப் போய்க் கேள்' என்றதாம்! எலி, மேகத்தைக் கேட்டபோது, 'காற்றடித்தால் நான் கரைந்து போவேன்; காற்றைக் கேள்,' என்றதாம்! காற்றைக் கேட்டபோது, 'நான் என்னதான் வலிவுள்ளதானாலும், காற்றைச் சுவர் வைத்துத் தடுத்துவிடுகிறார்கள்; எனவே, சுவற்றைப் போய்க் கேள்' என்றதாம்! சுவரைப் போய் எலி கேட்டபோது, 'நீ அல்லவா என்னை ஓட்டை போட்டு விடுகிறாய்? எனவே, என்னைவிட நீ வலிவுள்ளவன் அல்லவா?' என்றதாம்! பின், எலிக்குஞ்சுக்கும்—எலிக்குஞ்சுக்குமே திருமணம் நடைபெற்றதாம்! இது கதை!

"இதைப்போல நாம் எங்கெங்கோ தேடினோம்; பணம் படைத்தவர்களை எல்லாம் தேடினோம், நீதிக் கட்சிக் காலத்தில்!

"இராஜா சர். அண்ணாமலைச் செட்டியார் வீடு! 'ஆகா! இங்கே மட்டும் நுழைந்தால்—இந்த ஆதரவு மட்டும் கிடைத்தால், நாட்டை மீட்டுவிடலாம் அல்லவா?' என்றெண்ணினோம்; ஆனால், அங்கே போனால், மானத்தை மீட்டுக்கொண்டு வெளியே வருவதே பிரம்மப் பிரயத்தனமாகிவிடுகிறது! அப்படித்தான் பித்தாபுரத்தை எண்ணினோம்—அது, 'காற்றடித்தால் நான் கரைந்துவிடுவேன்' என்ற மேகமாயிருந்தது. இப்படிப் பார்த்துப் பார்த்துத்தான் கடைசியில், நாங்கள் உங்களிடத்தில்—மக்களிடத்தில் வந்திருக்கிறோம்; உங்களிடத்தில் வந்ததில் ஏமாற்றம் எதுவும் நிகழ்ந்துவிடவில்லை; எதிர்பார்த்ததைவிட கட்சி இன்று வளர்ந்திருக்கிறது.

"கலைவாணர்கள் எல்லாம் நம்முடைய கழகத்தில் இன்று பங்குகொண்டிருப்பதை, தம்பி சம்பத் விளக்க நீங்கள் கேட்டீர்கள்.

"ஒரு நாடு விடுதலை பெறுவதற்குரிய பக்குவத்தைப் பெற்றிருக்கிறதா என்பதற்கான அடையாளங்களைக் காண வேண்டுமானால்—அந்தப் பக்குவத்தை ஒரு நாடு பெற்றுவிட்டால், அந்த நாட்டில் உள்ள கவிவாணர்கள், கலைவாணர்கள், ஓவியர்கள், காவியம் தீட்டுவோர், கர்மவீரர்கள் இத்தனை பேருடைய உள்ளத்திலேயும் என்று விடுதலை உணர்வு எழும்புகிறதோ, அன்று அந்த நாடு விடுதலை பெறுகிறது என்று பொருள்!

"எழுச்சி மிக்க கவிதைகளை அளிக்கும் பாரதிதாசன்களை நாம் பெற்றிருக்கின்றோம! எண்ணத்திற்கு வண்ணம் தரும் புலவர் பெருமக்களைப் பெற்றிருக்கின்றோம்! வண்ணமுள்ள எண்ணத்தை வளமான காட்சியாக்கிக் காட்டும் கலைவாணர்களை நாம் பெற்றிருக்கிறோம்! இவர்கள் அனைவரும் நம்மிடமிருக்கும்போது நமக்கு என்ன குறை?

"'தேர்தலுக்குப் பணத்திற்கு எங்கே போவது?'—என்று கேட்கிறார்கள் அல்லவா, நம்மில்சிலர்; 'நம்முடைய கலைவாணர்கள் இருக்கும் போது நமக்கு என்ன குறை?' என்று நான் சொல்லும்போது, 'அவர்கள் சம்பாதித்த பணத்தை எடுத்துவரச் சொல்கிறேன்' என்பது அர்த்தமல்ல! நான் தெரிந்தவரையில், கலைவாணர்கள், வர வேண்டிய பொருளை எண்ணிக்கொண்டு, போன பொருளுக்காகப் புலம்பிக்கொண்டிருப்பவர்கள்தான்! ஆகையினால், பணமல்ல நான் குறிப்பிடுவது? அவர்கள் தங்கள் கலைத்துறைத் தொண்டினை, ஒரு ஆறு மாதம் இப்பக்கம் திருப்பினால் தீர்ந்தது பிரச்சினை!

"நமக்குக் கிடைத்திருக்கும் நல்ல வாய்ப்பை நாட்டு விடுதலைக்கும், நாட்டிற்குக் கேடான ஆட்சி நடத்துபவர்களுக்கு எதிரான ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்கும் நாம் பயன்படுத்தியாக வேண்டும். அதற்கு ஏற்ப நிலையை அமைத்துத்தர இந்த மாநில மாநாடு உறுதுணையாக அமைந்திருக்கிறது.

"இங்கே நீங்கள் கொண்டுள்ள உணர்ச்சியையும். பெற்ற நல்ல உற்சாகத்தையும், அடைந்துள்ள நல்ல ஆர்வத்தையும் தேங்கவிடாமல், நன்கு வளர்ச்சியுறச் செய்து, நாடெங்கும் இவை வளரச் செய்து, நாம் எல்லாம், நமது பொதுச் செயலாளர் காட்டும் வழி நடக்க வேண்டும்."

பம்பாயில் தொடர்ந்து போலீஸ் தடியடி!

119 அறப்போர் தொண்டர் கைது

பம்பாய், ஜுன் 8—

இன்றும் பம்பாயில் போலீசார் பல இடங்களில் தடியடிப் பிரயோகம செய்திருக்கின்றனர்; பலருக்குக் காயம்பட்டிருக்கிறது.

சம்யுக்த மராட்டியம் கோரி நடைபெறும் சத்தியாக்கிரகத்தில், இன்று மட்டும் 119 தொண்டர்கள் கைதாயினர் என்று தெரியவருகிறது; இவர்களில் 7 பேர்கள் வரை தாய்மார்கள் என்றும் தெரிய வருகிறது.

நகரம் இன்று அமைதியாக இருந்ததாகவும், ஒன்பது போலீசார் உட்பட எண்ணற்றோர் கல்லெறியால் காயம்பட்டதாகவும், தடியடிப் பிரயோகத்தால் காயம் பட்டோரில் 7 வயதுச் சிறுவனும் ஒருவன் என்றும், சர்க்கார் தகவல் அளித்திருக்கின்றனர்.

சம்யுக்த மராட்டிய சமிதியின் பம்பாய் நகரக் கிளை, தொடர்ந்து சத்தியாக்கிரகம் நடத்துவது எனவும், புதிய உற்சாகத்தோடு போராட்டம் நடத்தப்படும் என்றும் அறிவித்துள்ளதாகத் தெரிகிறது.

மேலும், மராட்டிய மக்களின் ஆர்வம் கூட்டிச் சேர்த்து ஒழுங்குபடுத்தப்பட்டு ஜனநாயக ரீதியான —அமைதி மிகுந்த போராட்டங்களுக்குப் பயன்படுத்தப்படாவிட்டால், எதிர்பார்ப்பதற்கு நேர்முரணான சம்பவங்கள் நடைபெற்றுவிடும் என்றும், சமிதி எச்சரித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

திருச்சி மாநில மாநாடு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டுச் செயலாளர் தோழர் எம். எஸ். மணி முன் மொழிய, வரவேற்புத் தலைவர் அம்பில் தர்மலிங்கம் வழி மொழிந்தார்.

மாநில மாநாடு—சீரும் சிறப்பும் பெற்று இனிது நடந்தேறியதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் பொதுச்செயலாளர் அவர்கள் தலைமைக் கழகச் சார்பில் நன்றியும், பாராட்டுதலும தெரிவித்தார். அத்துடன், மாநில மாநாட்டுத் தலைவரின் கையெழுத்திட்ட நற்சான்றிதழும் அளிக்கப்பட்டன.

மாநில மாநாட்டில் ஒலி பெருக்கி, ஒளி அமைப்புப் பணியினை திறம்படச்செய்த திருச்சி 'ராபி கம்பெனியின்' தலைவரான தோழர் ராபி அவர்களுக்கு, அண்ணா அவர்கள், வெள்ளிச் சந்தனப் பேலா ஒன்று வழங்கினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் தோழர் பொன்மலை பராங்குசம் நன்றி கூற விழா இனிது முடிவுற்றது.

கே. டி. எஸ். மணி உடல் நிலை

காஞ்சிபுரம், ஜுன் 9—

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி அவர்கள், மாநில மாநாட்டிற்கு வந்திருந்த பொழுது கொடிய வெப்ப நோய்க்கு ஆளானார். தக்க மருத்துவர்களைக் கொண்டு பரிசோதிக்கப்பட்டதில், இருதய நோய்க்கு அவர் ஆளாகி இருப்பதாகவும், அந்த நோயிலிருந்துத் தப்ப ஆறுதிங்களுக்கு ஓய்வாக இருக்க வேண்டுமென்றும் அம்மருத்துவர்கள் அறிவித்துள்ளனர். அதன்படி அவர் காஞ்சியில் தனது இல்லத்தில் ஓய்வு பெற்று வருகிறார். (ஒ. கி.)

சத்தியவாணிமுத்து

தோழியர் சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள் ஒமியோபதி மருத்துவத் துறையைப் பயின்று, அண்மையில் நடைபெற்ற பயிர்ச்சியில் தேர்வுற்றதற்கேற்ப D. M. (I. H.) என்ற பட்டம் பெற்றிருக்கிறார்.

நகர சுத்தி தொழிலாளர்மீது

தடியடிப் பிரயோகம்

பாட்டியாலா, ஜுன் 8—

ஊதிய உயர்வு கோரி இரண்டு வாரங்களாக வேலை நிறுத்தம் செய்துவரும் நகர சுத்தித் தொழிலாளர்களுக்கும்—போலீசாருக்கும் இடையே ஏற்பட்ட கைகலப்பினால் ஒரு துணைச்-இன்ஸ்பெக்டரும், ஒரு போலீஸ்காரரும் 12 நகர சுத்தி தொழிலாளரும் காயமடைந்தனர் எனத் தெரிகிறது.

போலீசார் தடியடிப் பிரயோகம் செய்திருக்கின்றனர்; 5 நகர சுத்தியாளர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிய வருகிறது

என் இந்தக் குழப்பம்?

கராச்சி, ஜுன் 8—

பாகிஸ்தான் ஆட்சிபீடத்திலிருந்து லீக் கட்சியை திருப்பப் பெறுவதுபற்றி லீக் தலைமையினர் சிந்தித்து வருவதாகத் தெரிகிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில்

அண்ணா

சுற்றுப் பயணம்

★

ஜுன் 14 : மாலை—இராமநாதபுரம்
இரவு—பரமக்குடி
" 15 : மாலை—திருவில்லிப்புத்தூர்
இரவு—தளவாய்புரம்
" 16 : மாலை—சாத்தூர்
இரவு—விருதுநகர்
" 17 : —அருப்புக்கோட்டை

அண்ணா அவர்களுடன் தோழர்கள் எம். எஸ். இராமசாமி, முகவை. ஆர். எஸ். பாண்டியன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

தமிழ் வளர்ச்சி மன்ற நூல் நிலைய நிதிக்காக

10—6—56 காலை 9 மணிக்கு, சென்னை—புதுவண்ணை தங்கம் டாக்கீஸில், மேற்படி மன்ற நூல் நிலைய நிதிக்காக, தோழர் மு. கருணாநிதி தீட்டிய 'பணம்' என்ற தமிழ்ப் படம நடைபெறும.

இராயபுரம் இலக்கிய மன்றம்

10—6—56 காலை 9-30 மணியளவில், பனைமரத்தொட்டி, அட்டபாளையம் கண்ணபிரான் பஜனைக் கோயிலில் ஓர் இலக்கியக் கூட்டம் திரு. அ. ஆடியபாதம் தலைமையில் நடைபெறும். திருவாளர்கள் மு. செ. சிவப்பிரகாசம், ம. செல்வராசன் முறையே 'புகழேந்தியின் புலமைத் திறன', 'தமிழ் மொழிச் செல்வம்' என்ற தலைப்புகளில் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

10—6—56 காலை 9-மணிக்கு, 42-வது வட்ட கழகப் பணிமனையில (4, நமசிவாய முதலி தெரு) தோழர் நீலநாராயணன் தலைமையில், 'மாநாடு முடிவும் நம் கடமையும்' எனனும் பொருள் பற்றி தோழர்கள பலர் பேசுவர்.

திருமணம்

10—6—56 காலை 8-மணியளவில், சென்னை—கொருக்குப் பேட்டை, சுதந்திரபுரம் காலனி எண் 10-ல், தோழர் எஸ். எட்டியப்பன்—தோழியர் ஏ. சக்குபாய் திருமணம், தோழர் ஏ. இரத்தினம் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் நடைபெறும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், சேதுராசன், ஆடலரசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

பரீட்சையில் ஒன்றாகத்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கூட!

38 வயதான இவர், தனது மகள் சத்தியவதி மொர்ச்சனட் என்ற பெண்ணுடன், 1951-ல் துவக்கக் கல்விப் பரீட்சையும் எழுதித் தேறினராம்!

அமெரிக்கத் தலைவருக்கு உடல் நலக் குறைவு

வாஷிங்டன், ஜுன் 8—

அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசனேவருக்கு திடீரென உடல் நலக் குறைவு ஏற்பட்டு, மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லப் பட்டுள்ளார்.

சிறுகுடலில் வீக்கம் ஏற்பட்டிருப்பதாக 'டாக்டர்'கள் கூறியுள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம். சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.